# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,158 — 1960 ජූලි 15 වැනි සිකුරාදා — 15.7.1960

12,158 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 171 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 172 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 173 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### அரசாங்க பாஷைப் பகுதி

#### தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள்

அரசாங்க பாஷைப் பகுதி நடத்தவிருக்கும் மேற்படி பயிற்சி வகுப்புக்களிற் சேருவதற்கருகதையுள்ள ஆண்களிடமிருந்தும் பெண்களிடமிருந்தும், விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த பயிற்சி வகுப்புக்கள் ஏறக்குறைய ஒரு வருட காலத்திற்குத் தொடர்ச்சியாகக் கொழும்பில் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய 15 பயிற்சியாளருக்கு இடமுண்டு.

2. வேண்டிய தகைமைகள் :—

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்—

(அ) தான் இலங்கையர் என்பதற்குத் திருப்திகரமான அத்தாட்சி அளிக்க வேண்டும். (ஒரு " இலங்கையர் " என்பவர்—வம்சாவழியால் அல்லது—பதிவு செய்யப்பட்ட முறையினால் இலங்கைப் பிரஜையானவர்).

(ஆ) சி.பா.த.ப. (ஆங்கிலம்/ சிங்களம்/ தமிழ்) பரீட்சையில் தமிழ்ப் பாஷையிலும் வேறும் இரண்டு பாடங்களிலும் நல்ல சித்தி பெற்றுத் தேறியவராக அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதற்கு உயர்ந்த பரீட்சையில் தேறியவராக இருத்தல் வேண்டும்.

(இ) 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதியன்று 17 வயதுக்குக் குறையாதவராயும் 22 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஈ) மிகச் சிறந்த குணநலமும் ஆரோக்கியமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

3. கொழும்பில் இதற்கென்று குறிக்கப்பட்டுள்ள இடத்திற்குக் குறிக்கப்பட்ட நேரத்தில் வந்து நேர்முகப் பரீட்சைக்கும் சோதனைக்கும் விண்ணப்பதாரர் சமூகமளிக்கவேண்டும். அதற்கான திகதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். இதற்கென்று பிரயாணச் செலவோ, வேறெச் செலவோ கொடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பப் பத்திரத்தில் தெரிவிக்கப்படும் கூற்று ஏதுவாயினும் பிழையென்று தெரிவுக்கு முன் காணப்படின் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படற்கு அருகராகார். தெரிவுக்குப்பின் அப்பிழை காணப்படின் பயிற்சியில் இருந்து விலக்கப்படுவார்.

4. பயிற்சி பெறுவோருக்குப் பயிற்சிக் காலத்தில் எவ்விதமான சம்பளமோ படியோ வழங்கப்படமாட்டாது. பயிற்சிக்காலம் முடிந்ததும் பயிற்சிபெற்றவர்களுக்கு அரசாங்க பாஷைப் பகுதிக் கந்தோரிலோ அரசாங்க சேவையிலோ தற்காலிகமான முறையிலேனும் நிரந்தர முறையிலேனும் வேலையளிக்கப்படுமென்ற உத்தரவாதமும் கொடுக்கப்பட மாட்டாது. ஆனால் அரசாங்கச் சுருக்கெழுத்தாளர் மாற்றுமுறைச் சேவையிற் சேருதற்குரிய தமிழ்ச் சுருக்கெழுத்தாளருக்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதிவாய்ந்த பயிற்சியாளருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும். இப்பரீட்சையில் சித்திபெறுவோர் சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த் தரத்தில், இதற்கெனவுள்ள சம்பள விகிதத்தில், நியமிக்கப்படலாம்.

5. பயிற்சிக் காலத்தில் இடைக்கிடை பரீட்சைகள் நடாத்தப்படும். அவற்றின் பலாபலன்களுக்கிணங்க பயிற்சியாளர் தொடர்ந்து பயிற்சி பெற அனுமதிக்கப்படுவர். தினவரவில், படிப்பில், பொதுத் தகைமையில் அல்லது ஒழுக்கத்தில் அரசாங்க பாஷைப்பகுதி திருப்திப்படும் விதத்தில் நடக்காத பயிற்சியாளர் எந்த நேரமும் உடன் நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர். அவ்வாறு நீக்கம் செய்யப்படும் எப்பயிற்சியாளரும், பின்னர் நடாத்தப்படும் பயிற்சி வகுப்புகளுக்குத் தெரிவு செய்யப்பட அருகராகார். பயிற்சிக்குரிய காலம் முடிந்ததும் பரீட்சாதிகாரியினால் தகைமையறி பரீட்சை ஒன்று நடாத்தப்படும். அப்பரீட்சையில் தேறுபவர்களுக்கு தராதரப் பத்திரம் வழங்கப்படும். காலந்தோறும் பிறப்பிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கும், அறிவுறுத்தல்களுக்குமிணங்கி நடப்பதாக ஒவ்வொரு பயிற்சியாளரும் உடன்படிக்கைப் பத்திரத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

6. கவனவீனத்தாலோ வேண்டுமென்ற பராமுகத்தாலோ இழக்கப்படும் பொருள்களுக்கு அல்லது சேதப்படுத்தப்படும் உபகரணங்களுக்கு ஈடாக, ஒவ்வொரு பயிற்சியாளரும் தாம் பயிற்சி வகுப்புக்கு அனுமதிக்கப்பட்டதும் இரண்டு பிணைக்காரருடன் 100 ரூபாவுக்குப் பிணை கொடுத்தல் வேண்டும்.

7. 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதியோ அதற்கு முன்னோ கிடைக்கக்கூடிய விதத்தில் கொழும்பு, தபாற் பெட்டி இலக்கம் 598, அரசாங்க பாஷை அலுவல்களின் விசேட கொமிஷனர் என்ற விலாசத்திற்கு விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் மாதிரிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

அரசாங்க பாஷைப் பகுதி,
22, நீட் வீதி,
கொழும்பு 7.
1960 ம் ஆண்டு ஜூலை மீ 8 ந் உ.

விசேட அதிகாரி,
அரசாங்க பாஷை அலுவல்களின்.

#### சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகளுக்குச் சேருவதற்கான விண்ணப்பம் (தமிழ்)

1. முழுப்பெயர் :————.

(தெளிவாக எழுதுக.)

2. விலாசம் :————.

3. தேசீய இனம் :————.

(இலங்கைப் பிரஜையெனின் வம்சாவழியிலோ பதிவு செய்யப்பட்ட முறைவழியிலோ ?)

4. 25.7.60 இல் வயதும் பிறந்த திகதியும் :————.
(பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி மாத்திரம் இணைக்கப்படுதல் வேண்டும்.)

5. ஆணோ பெண்ணோ என்பது :————.

6. விவாகமானவரா தனியானவரா ? :————.

7. சித்தியடைந்த அதி உயர்ந்த பரீட்சை :————.
அதிலெடுத்த பாடங்கள் :————.
சித்தியெய்திய திகதி :————.

8. சி.பா.த.ப. பரீட்சையில் அல்லது அதற்குக் கூடிய பரீட்சையில் தமிழில் குறைந்தபட்சம் நல்ல சித்தியை விண்ணப்பதாரர் பெற்றுள்ளார் என்பதைக் காட்டத் தலைமையாசிரியரின் அத்தாட்சி :—

9. எங்கே கல்வி பயின்றவர் என்பதைத் திகதிகளுடன் காட்டுக :————

10. தமிழில் விசேட தகைமைகள் ஏதாவது உண்டோ ? :————.

11. தமிழ்/ஆங்கில/சிங்கள சுருக்கெழுத்தில் அனுபவம் ஏதும் உண்டா :————.

12. ஆங்கிலத்தில் அடைந்த தரம் :————.

13. இப்போதைய தொழில் :————.
(ஏதாவது உண்டேல்.)

14. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் விலாசமும் :————.

15. விண்ணப்பகாரரைப்பற்றி விசாரணை செய்வதற்குரிய இருவரது பெயர்களும் விலாசங்களும் : (அ) ....................
(ஆ) ....................

16. விண்ணப்பதாரரின் தகைமை, ஒழுக்கம், பயிற்சிக்குத் தகுதியுடைமை என்பனவற்றைக் காட்டுவனவாய, சமீபகாலத்திற் பெற்ற குணநலவத்தாட்சிப் பிரதிகள் தந்திருப்பவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.
(இவற்றில் ஒன்று விண்ணப்பதாரர் படித்த பாடசாலைப் பிரதமாசிரியரினதாக இருக்க வேண்டும்)

17. ஏதாவது வேறு தகைமைகள் உண்டேல் :————.

18. சி.பா.த.ப. பரீட்சையில் நல்ல சித்திகள் பெற்ற பாடங்கள் :————.

திகதி : ................ : ................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சிறுப்பர் சேவையின் 3 ம் தரத்தில் சேர்க்கப்படுதற்கான (சிங்கள, தமிழ், ஆங்கிலப்) பரீட்சை

1959 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ந் திகதி நடைபெற்ற (சிங்கள, தமிழ், ஆங்கிலப்) பரீட்சையின் பெறுபேறுகளைக்கொண்டு சிறுப்பர் சேவையின் III ம் தரத்தில் நியமனம் பெறுவதற்குப் பின்வரும் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

| பெயர் | விலாசம் |
|---|---|
| அமரசிங்ஹ, டீ. என். .. .. | ஆண்டிகலவத்த, உறுகமுவை |
| தயரத்ன, டபிள்யூ. .. .. .. | அத்தலே பாடசாலே, தெஹிபிற்றிய, புறுலபெத்த |
| தர்மதிலக்க, ஈ. எம். .. .. .. | ஹெனகெதற, அமிதிறிகல, றுவான்வலே |
| பெர்ணண்டோ, யு .பி. ஏ. .. .. | மனக்குளம, காக்காப்பள்ளி |
| குணசிறி, ஜீ. .. .. .. | கலகேதற, பாதுக்கை |
| ஹறி, எம். .. .. .. | அளுத்கெதறவத்தை, யக்கபத்த றோட்டு, அக்குரஸ்ஸ |
| கருணகரன், வீ. .. .. .. | 14, பண்ணை றோட்டு, கொட்டடி, யாழ்ப்பாணம் |
| கருணசேன, எச். .. .. .. | 288, எப்பிற்றமுல்லவத்த, மீகொடை |
| கிரிமுடியான்சே, ஜே. எம். .. .. | கொடவித்த, பொத்துஹேர |
| கொத்தலாவலே, டீ. டீ. .. .. | அன்ஞசிவத்தை, போமெரிய, கடுவெலே |
| குலரத்ன, வை. ஏ. டீ. .. .. | " ரத்னகிரி ", பஹலயாகொட, கணேமுல்லே |
| குலத்துங்க, எல். .. .. .. | மீகாஹக்கும்புற, புளத்சிங்கல |
| குமாரசிங்ஹ, கே. வி. டீ. ஜே. .. .. | விஜய வாச, யத்தறமுல்ல, பெந்தோட்டை |
| லயனல், டீ. .. .. | மடுறுவெல, அங்குறுவத்தோட்ட |
| லியனபத்திரான, ஜி. எஸ். ஏ. .. .. | 502, காலி றோட்டு, கொள்ளுப்பிட்டி |
| மக்கி, எம். எஸ். எம். .. .. | " மன்ஹிலுறுஹம் ", டீமலஹீறிய, அறநாயக்க |
| பேமரத்ன, எச். எல். டபிள்யூ. .. .. | " ரத்னசிறி ", நாவலப்பிட்டி |
| பீரிஸ், என். பி. .. .. .. | 44, மெயின் வீதி, ஜாயலே |
| பெரேரா, பி. ஏ. வி. ஏ. .. .. | குமார நிவஸ்ஸ, தனுகம, களனி |
| பெரேரா, எம். என். ரி. .. .. | 262, கொறலவெல்ல, மொறட்டுவ |
| பெரேரா, என். வி. .. .. | 237, " ஏ ", தனுகம, களனி |
| பியரத்ன, எஸ். .. .. .. | " நந்தன ", முதலிகம, பொத்துப்பிட்டிய, தர்கா நகர். |
| பியசிரி, டீ. .. .. .. | தந்தேனிய, மீதிகம, அஹங்கம |
| பியரத்ன, டீ. டபிள்யு. .. .. | பொக்குன்வல, பனுவெல, எஹெலியகொடை |
| பியசேன, எம். டீ. .. .. .. | இந்தராவத்த றோட்டு, தெயகம, கல்பத்த |
| ரத்னயக்க, டபிள்யூ. ஏ. .. .. | தெவலப்பொல, வியாங்கொடை |
| சமரக்கூன், ஆர். பி. .. .. .. | சமரகிரி, இலுக்கொட, கலுகமுவா, குருநாகல் வழி |
| சமரசிங்ஹ, எஸ். டபிள்யூ. .. .. | தொரணகொட, உடுகம்பலே |
| சேரம், டீ. கே. .. .. .. | 96, ஹொறணை றோட்டு, பாதுக்கை |
| செனரத்ன, டீ. .. .. .. | ஜே. டீ. எஸ். செனரத்ன மேற்பார்த்து, உடுப்பில, மிரிஸ்ஸ |
| சிரிசேன, என். கே. .. .. .. | றிலோலுவ, கிரியுல்ல |
| சுரேந்திரநாதன், எஸ். பி. .. .. | 195, மெயின் வீதி, எட்டியாந்தோட்டை |
| விமலதாஸ, என். டீ. .. .. | பலன்னொறுவ, கோனப்பொல |

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 14 ந் வெ.

எச். ஈ. பீரிஸ்,
திறைசேரியின் பிரதிக் காரியதரிசி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

மொனருகலை நீர்ப்பாசன உப-பகுதியிலுள்ள மஹாவெவா திட்டத்தை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1 ல் 355 ம் இலக்க அறையிலுள்ள, விவசாய, நில அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் அவர்களால் 30.8.60 செவ்வாய்க்கிழமை, காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத்துறையிலும், புகையிரதப் பகுதியிலும், பொது மராமத்து இலாகாவிலும் ரூபா 85,000 க்கு, அல்லது அதற்கு மேலும் பதிவு செய்துள்ள கொந்தராத்துக்காரர்கள் மட்டுமே மேற்படி கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையோராவர். பண்டாரவளையிலுள்ள ஊவாப்பகுதியின் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். எந்தக் கச்சேரியிலேனும் ரூபா 100 கட்டுப்பணமாய்க் கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை 26.8.60 வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். பண்டாரவளையிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசன அலுவலகத்தில் மேலதிகமான விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பி. செல்லகேவா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1960 ம் ௵ ஜூன் ௴ 28 ந் உ.

---

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள, மேற்பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், கிம்புலப்பிற்றி, அணைக்கட்டுத்திட்டவேலைக்கான கேள்விப்பத்திரங்களை நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 25,000 க்கு அல்லது கூடிய தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 9.8.1960 மு.ப. 11.30 மணிவரையும் பெற்றுக்கொள்வார்.

இதையிட்டு எல்லா விபரங்களையும் படங்களையும் அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப்பத்திரங்களையும், கீழ்க்காணும் காரியஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பற்றுச்சீட்டுப்பெற்று தாம் பதிவு செய்யப்பட்டவரென ருசுப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்குக் கேள்விப்பத்திரங்கள் 6.8.60 வரைக்கும் அலுவலக வேலை நேரங்களில் வழங்கப்படும்.

தற்பொழுது அரசாங்கத்தின்கீழ் ஒப்பந்த வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்கள், தங்களது வேலைகள் திருப்தியாக முன்னேறுகின்றனவென அத்தாட்சிப்பத்திரங்கள் அவ்வேலை மேற்பார்வையாளர்களிடமிருந்து பெற்று அவற்றையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை நிராகரிக்க அல்லது அவற்றின ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் பிரத்தியேக உரிமை.

எவ். ஏ. லோபோ,
நீர்ப்பாசன அதிகாரி,
கொழும்பு உப பகுதி.

நீர்ப்பாசன அதிகாரி காரியாலயம்,
வேலுவனைத் தெரு,
கொழும்பு 9.

---

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள மேற்பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் குறுகலையில் வியன்வலை அணைக்கட்டுத் திட்ட வேலைக்கான கேள்விப்பத்திரங்களை நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 12,000 க்கு அல்லது கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 9.8.60 மு.ப. 11.30 மணிவரையும் பெற்றுக் கொள்வார்.

இதையிட்டு எல்லா விபரங்களையும், படங்களையும் அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப்பத்திரங்களையும், கீழ்க்காணும் காரியஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுத் தாம் பதிவுசெய்யப்பட்டவரென ருசுப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு, கேள்விப்பத்திரங்கள் 6.8.1960 வரைக்கும், அலுவலக வேலை நேரங்களில் வழங்கப்படும்.

தற்பொழுது அரசாங்கத்தின் கீழ் ஒப்பந்த வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது வேலைகள் திருப்தியாக, முன்னேறுகின்றனவென அத்தாட்சிப்பத்திரங்கள் அவ்வேலை மேற்பார்வையாளர்களிடமிருந்து பெற்று, அவற்றையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை நிராகரிக்க அல்லது அவற்றின் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் பிரத்தியேக உரிமை.

எவ். ஏ. லோபோ,
நீர்ப்பாசன அதிகாரி,
கொழும்பு உப பகுதி.

நீர்ப்பாசன அதிகாரி காரியாலயம்,
வேலுவனைத் தெரு,
கொழும்பு 9.

---

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள மேற்பகுதிப் பெரும்பாக, நீர்ப்பாசனப் பொறியியலாளர், போமிரியத் திட்டத்தில் வெள்ளப் பெருக்குச் சேதங்களைத் திருத்துவதற்கான கேள்விப்பத்திரங்களை நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 25,000 க்கு அல்லது கூடிய தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 9.8.1960 மு.ப. 11.30 மணிவரையும் ஏற்றுக்கொள்வார்.

இதையிட்டு எல்லா விபரங்களையும் படங்களையும் அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப்பத்திரங்களையும் கீழ்க்காணும் காரியஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்று தாம் பதிவு செய்யப்பட்டவரென ருசுப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்குக் கேள்விப்பத்திரங்கள் 6.8.60 வரைக்கும், காரியாலய வேலை நேரங்களில் வழங்கப்படும்.

தற்பொழுது அரசாங்கத்தின்கீழ் ஒப்பந்த வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்கள், தங்களது வேலைகள் திருப்தியாக முன்னேறுகின்றனவென அத்தாட்சிப்பத்திரங்கள் அவ்வேலை மேற்பார்வையாளர்களிடமிருந்து பெற்று அவற்றையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை நிராகரிக்க அல்லது அவற்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரம், அரசாங்கத்தின் பிரத்தியேக உரிமை.

எவ். ஏ. லோபோ,
நீர்ப்பாசன அதிகாரி.
கொழும்பு உப பகுதி.

நீர்ப்பாசன அதிகாரி காரியாலயம்,
வேலுவனைத் தெரு,
கொழும்பு 9.

---

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள மேற்பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் கழு அக்கலை பிறண்டிகம்பொலைத் திட்டத்தில் ஒரு "றெகுலேற்றற்" கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்களை நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 6,000/- க்கு அல்லது கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 9.8.1960 மு. ப. 11.30 மணி வரையும் ஏற்றுக்கொள்வார்.

இதையிட்டு எல்லா விபரங்களையும் படங்களையும் அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப்பத்திரங்களையும் கீழ்க்காணும் காரியஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்று தாம் பதிவு செய்யப்பட்டவரென ருசுப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்குக் கேள்விப் பத்திரங்கள், 6.8.60 வரைக்கும் அலுவலக வேலை நேரங்களில் வழங்கப்படும்.

தற்பொழுது அரசாங்கத்தின் கீழ் ஒப்பந்த வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது வேலைகள் திருப்தியாக முன்னேறுகின்றனவென அத்தாட்சிப் பத்திரங்கள் அவ்வேலை மேற்பார்வையாளர்களிடமிருந்து பெற்று அவற்றையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை நிராகரிக்க அல்லது அவற்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் பிரத்தியேக உரிமை.

எவ். ஏ. லோபோ,
நீர்ப்பாசன அதிகாரி,
கொழும்பு உப பகுதி.

நீர்ப்பாசன அதிகாரி காரியாலயம்,
வேலுவனைத் தெரு,
கொழும்பு 9.

## நீர்ப்பாசன இலாகா

கிழக்குப் பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் கீழ்க்காணும் வேலைகட்கு அவை ஒவ்வொன்றிற்கும் எதிரேயும் குறிக்கப் பட்டுள்ள தொகைக்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசன இலாக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடம் இருந்து 10.8.60 காலை 9.30 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) ஓவசியர் வசிக்கும் வீடு, புணானை அணைக்கட்டு வலதுகரைத் திட்டம்—வாகனேரியில் கட்டுதல் (ரூபா 16,000) ;

(2) தொழிலாளர் வசிக்கும் இரட்டை வீடு, புணானை அணைக்கட்டு வலது கரைத் திட்டம்—வாகனேரியில் கட்டுதல் (ரூபா 13,300).

2. இரு பிரதி கொண்ட வெற்றுக்கேள்விப் பத்திரங்கள் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த செங்கலடி உறுகாம நீர்ப்பாசன உப பிரிவில் நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களிடம் இருந்து 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9 ம் திகதி செவ்வாய்க்கிழமை வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10 ம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் பார்வையிடப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினுல் பிரசன்னமாய் இருக் கலாம். கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் பெயரில் ஒவ்வொரு வேலைக் கும் ரூபா 25 க்குப் பெறுமதியான காசுக்கட்டளையை அல்லது பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங் கள் வழங்கப்படும்.

3. மேற்கொண்டு விபரங்களைக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர் களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சி. ஜயசிங்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
உறுகாம உப பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம்,
செங்கலடி, கி. மா,
1960 ம் ஞு ஜூலை மீ 4 ந வ.

---

## நீர்ப்பாசன இலாகா—திருகோணமலை உப பகுதி

(அ) திருகோணமலை மாவட்ட பெரும்பாக நீர்ப்பாசன பொறியிய. லாளர், இவ்விலாகாவில் 50,000 ரூபாவுக்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும், பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களிடமிருந்து முதலிக்குளத்தின் தண்ணீர்க்கரைக்கட்டை நீர் அலை அரிக்காது பாது காக்க கருங்கல் பதிப்பதற்கு சீல்வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிவரையும் ஏற்றுக்கொள்வார்.

(ஆ) கேள்விப் பத்திரங்கள் கீழ்க்கையொப்பமிடப்பட்டிருப்பவரிட மிருந்து 8.8.1960 வரையும் (காரியாலய நேரங்களில்) பெற்றுக்கொள்ள லாம். கையொப்பமிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரணையாக, திரு கோணமலை பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், உவர்மலை, திருக் கோணமலை என்ற விலாசத்திற்கு 10.8.1960 காலை 10 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது மேல்மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

(இ) எந்த மாகாண அதிபர் கந்தோரிலாவது 50 ரூபா கட்டிய பற்றுச்சீட்டுடன் மேலே கூறப்பட்ட தகுதிகளும் உடையவர்களுக்கு மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

(ஈ) தனித்தனியே சீல்வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களுக்கு மனுச் செய்யும் போது, தற்சமயம் அரசாங்கத்தில் கொந்தராத்து வேலை செய்பவர்கள் அப்பகுதி உத்தியோகஸ்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட நல்வேலைப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(உ) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப் பத்திரங்கள் அனுப்பியவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

(ஊ) இன்னும் தேவையான விபரங்களுக்கும், படங்கள் முதலிய வற்றின் விபரங்களுக்கும் கீழ்க்கையொப்பமிடப்பட்டவருடைய கந்தோ ருக்கு வந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவசுப்பிரமணியம்,
உப-நீர்ப்பாசன கந்தோர் அதிபர்,
திருகோணமலை உப-பகுதி.

உள்துறைமுகத்தெரு, திருகோணமலை,
1960 ம் ஞு ஜூலை மீ 8 ந வ.

## கமத்தொழிற் சேவைப் பகுதி

### பாவிக்க முடியாத லேண்ட் ரேவர் (Land Rover) வாங்குவதற்கு கேள்விப்பத்திரம் கோருதல்

இல. EL 1304 பதிவு இலக்கமுள்ள பாவிக்க முடியாத "லேண்ட் ரேவர்" வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்களைக் கமத்தொழிற் சேவைப்பகுதி கேள்விச்சபைத் தலைவர், 42, எடின்பேக் கிறெசன்ற், கொழும்பு 7, 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 8 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளுவார்.

மேற்கொண்டு தேவைப்படும் எல்லா விபரங்களும் கீழே குறிப்பிடப் பட்டிருப்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. ஏ. ஜெகராசா,
கமத்தொழிற் சேவை ஆணையாளருக்காக.

இல. 60 ஹோட்டன் இடம்,
கொழும்பு 7,
1960 ம் ஞு ஜூலை மீ 8 ந வ.

---

### உணவுப் பொருட்களைக் குதங்களுக்கும், சீனக்குடாவிற்கும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள விநியோக நிலையத்திற்கும் இடையில் எடுத்துச்செல்லுதற்கும் கையாளுதற்குமான கோரிக்கைகள், 1960/61

1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதிக்கும் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதிக்குமிடையிலுள்ள காலத்தில் கீழ்க் காணும் சேவைகள் செய்வதற்கான கோரிக்கைகள் உணவு, வர்த்தக, வியாபார அமைச்சின் கோரிக்கைச் சபைத்தலைவரால் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2, என்னும் விலாசத்தில் 1960 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**சேவைகள்.**—(அ) திருகோணமலை உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதிக் குதங்களிலிருந்து உணவுப் பொருட்களைக் கொண்ட மூடைகளை இறக்கவும், லொறிகளில் ஏற்றிப் போர் அடுக்கவும், ஏனைய திருகோணமலையிலுள்ள உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதிக் குதங் களுக்கு எடுத்துச் செல்லவும் இறக்கி வேண்டிய உயரத்திற்குப் போரடுக்கவும் ;

(ஆ) திருகோணமலை உணவுக்கட்டுப்பாட்டுப் பகுதிக் குதங்களில் உண வுப்பொருட்களைக் கொண்ட மூடைகளை இறக்கவும், லொறிகளில் ஏற்றிப் போரடுக்கவும் திருகோணமலைப் புகையிரத நிலையத் திற்கு எடுத்துச் செல்லவும், இறக்கிப் புகையிரத சாமான் வண்டிகளில் ஏற்றிப் போரடுக்கவும்.

குதங்கள் என்பன ஹாங்கர்கள், பண்டசாலைகள், விநியோக நிலையங் கள் மற்றும் உணவுப்பகுதியால் உணவுப்பொருட்கள் சேகரிப்பதற்குப் பாவிக்கப்படும் இடங்கள் முதலியவற்றைக் குறிக்கும்.

1960 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23 ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரைக்கும், 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப்பத்தி ரங்களில் (இரு பிரதிகளில்) கோரிக்கைகள் செய்யப்படவேண்டும்.

உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூ. 250 செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டைக் காண்பிப்பதன் பேரில் கோரிக்கைப் பத்திரங்கள் வழங்கப் படும். இச்சேவைகள் பற்றிய விபரங்களடங்கிய பத்திரம் உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

கொழும்பு,
1960 ம் ஞு ஆனி மீ 28 ந் திகதி.

---

### வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வவுனியா விநியோக ஸ்தானத்திற்கு உணவுப் பொருட்களையும் "கெயர்" மாவையும் ஏற்றிச் செல்லு தல் முதலியவற்றிற்கான கேள்விப்பத்திரங்கள், 1960/61

1960 ம் ஆண்டு அக்ரோபர் 1 ம் திகதி துவக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ம் திகதிவரைக்கும் வவுனியா விநியோக ஸ்தானத்தில் உணவுப் பொருட்களையும் கெயர் மாப்பாலையும் ஏற்றிச் செல்லுதல் முதலியவற்றிற்கான கேள்விப்பத்திரங்கள் வர்த்தகம், உணவு சம்பந்தப்பட்ட உணவு மந்திரி காரியாலயச்சபையின் தலைவரிடம் (330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2), கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குமுன் சமர்ப்பிக்க வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் பெற விண்ணப்பம் செய்யவிரும்புவோர் கேள்விப்பத்திரங்களை ரூபா 250 (ரூபாய் இருநூற்று ஐம்பது) இக் கச்சேரியில் கட்டி 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ந் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 2.30 மணிக்குமுன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்படி விஷயம் பற்றிய ஏனைய விபரங்களுக்கு வவுனியாக் கச்சேரி யில் சென்று பெற்றுக்கொள்ளலாம்.

ப. செல்வரத்தினம்,
வவுனியா மாவட்ட உதவி உணவுவிலைக் கட்டுப்பாட்டதிகாரி.

உணவுக் கட்டுப்பாட்டுக் கந்தோர்,
கச்சேரி, வவுனியா, 4.7.60.

---

**வவுனியா மாவட்டத்தில் முல்லைத்தீவு விநியோக ஸ்தானத்தில் உணவுப் பொருட்களையும் " கெயர் " பால் மாவையும் ஏற்றிச் செல்லுதல் முதலியவற்றிற்கான கேள்விப்பத்திரங்கள்—1960/61**

1960 ம் ஆண்டு அக்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி வரைக்கும் முல்லைத்தீவு ஸ்தானத்தில் உணவுப் பொருட்களையும் " கெயர் " பால் மாவையும் ஏற்றிச் செல்லுதல் முதலியவற்றிற்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் விண்ணப்பம் செய்ய விரும்புவோர் கேள்விப் பத்திரங்களை ரூபா 50 (ரூபா ஐம்பது) இக்கச்சேரியில் கட்டி 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மேற்படி விஷயம் பற்றிய ஏனைய விபரங்களுக்கு வவுனியாக் கச்சேரியில் சென்று பெற்றுக்கொள்ளலாம்.

ப. செல்வரத்தினம்,
வவுனியா மாவட்ட உதவி உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரி.

உணவுக்கட்டுப்பாட்டுக் கந்தோர்,
வவுனியாக் கச்சேரி, 4.7.60.

---

**உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கான விண்ணப்பங்கள்—1960/61**

1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக்கும் உணவுப் பொருட்கள் ஏற்று மதி செய்வதற்கான விண்ணப்பப் பத்திரங்கள், கொழும்பு 2, யூனியன் வீதி, 330 ம் இலக்கத்தில் அமைந்துள்ள உணவு வர்த்தக (உணவு) மந்திரி காரியாலயத்தில் உத்தரவாத கேள்விச் சபைத் தலைவரால், 22.8.60 மதியம் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேல் குறித்து விண்ணப்பத்தையிட்ட முழு விபரமும், விண்ணப்பப் பத்திரங்களும், மட்டக்களப்பு மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் கந்தோரில், கந்தோர் நேரங்களில், 20.8.60, மதியம் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. சுந்தரமூர்த்தி,
மட்டக்களப்பு மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூலை 15 ந் மீ உ.

---

**இலங்கைப் போக்குவரத்துச் சபை**

**விற்பனவு அறிவித்தல்**

கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்கு வரத்துச் சபை, கேள்விப் பத்திர சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ம் திகதி மு.ப. 10 மணிவரை, பொரலஸ்கமுவை, வெரஹெரை இலங்கை போக்குவரத்துச் சபை விநியோகப்பகுதி கையளித் தல் இடத்தில் இருக்கும் கீழ்த் தரப்பட்டுள்ள உபயோகிக்கத் தகாத இருப்புப் பொருட்களை கொள்வனவு செய்து எடுத்துச்செல்வதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1. பலவின ரயர்கள் (ஒரு கூறில் 300) | .. | 2 கூறுகள் |
| 2. ரியூப்புக்களும் ஒட்டுமடிப்புக்களும் (ரியூப்புக்கள் 892, ஒட்டுமடிப்புக்கள் 583) | .. | 1 கூறு |
| 3. பெரிய பற்றறிகள் (70) | .. | 1 ,, |
| 4. சிறிய பற்றறிகள் (247) | .. | 1 ,, |
| 5. அலுமினியம் கழிவு (கிட்டத்தட்ட 2 தொன்கள்) | .. | 1 ,, |
| 6. கழிவு இரும்பு (மோட்டார் மாறுறுப்புகள்) | .. | 1 ,, |
| 7. வெற்று 45 கலன் தகரப்பீப்பாக்கள் (314) | .. | 1 ,, |
| 8. வெற்று தகரப் பாத்திரங்கள் (44) | .. | 1 ,, |
| 9. மரம் (பழைய கழிக்கப்பட்ட பஸ்களிலிருந்து) | .. | 1 ,, |
| 10. கல்மிலை பூவெட்டுக்கள் | .. | 1 ,, |
| 11. " போல் றேசேர்ஸ் " (கிட்டத்தட்ட 15 அந்தர்) | .. | 1 ,, |
| 12. செய்பும் பித்தளையும் (கிட்டத்தட்ட 6 அந்தர்) | .. | 1 ,, |
| 13. வார்ப்பு அலுமினியம் (கிட்டத்தட்ட 2 அந்தர்) | .. | 1 ,, |

எல்லாக் கூறுகளுக்கும் எண்ணிடப்படும். கேள்விப் பத்திரகாரர் எல்லாக் கூறுகளுக்கும் அல்லது தனி தனிக் கூறுகளுக்கும் கேள்விகளை அனுப்பலாம்.

5 ம், 11 ம், 12 ம், 13 ம் எண்களைக்கொண்ட இனங்களுக்கு அந்தர் விகிதத்தை கேட்கவேண்டும்.

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இனத்துக்கு கேள்விப்பத்திர கட்டுப்பணமாக ரூபா 100 கட்டவேண்டும். இக்கட்டுப்பணம், கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை, பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டி, இந்தப் பற்றுச் சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும். இந்தக் கட்டுப் பணம், தேர்ந்தெடுக்கப்படாத கேள்விப்பத்திரகாரருக்கு முடிவு செய்யப் பட்டதன்பின் உடனடியாகவும், மற்றவர்களுக்கு கேள்விப்பத்திர நியதி களை திருப்திகரமாய் நிறைவேற்றிய பின்பும் திருப்பிக் கொடுக்கப்படும். என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் "உபயோகிக்கத்தகாத பொருள் களுக்கான கேள்விப்பத்திரம்" என்று தெளிவாக குறிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொண்டதான அறிவித்தல் கிடைத்த 3 நாட்டுக்களுக்குள் கேள்விப் பத்திர முழுத்தொகையையும் கட்டி, கட்டிய 7 நாட்டுகளுக்குள் பொருள் களை எடுத்துச்செல்லவேண்டும். குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் கொடுப் பனவு செய்யப்படாவிடின் அல்லது கொடுப்பனவு செய்தபின் 7 நாட் களுக்குள் கூறுகளை எடுத்துச் செல்லாவிடில் சபை தனது தற்றுணி புடன் கூறுகளை விற்பனவு அல்லது கையளித்தல் செய்யலாம்; கேள் விப்பத்திர கட்டுப்பணத்தை தடுத்துவைக்கலாம். மேலும், கேள்விப் பத்திரகாரரை சபையிடம் தவறிய ஒப்பந்தகாரர் நிரலில் சேர்த்துக் கொள்ளலாம்.

கிடைத்த கேள்விகளை, ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, ஏற்றுக்கொள்ளவோ அல்லது தள்ளவோ சபை தனக்கு உரிமையை ஒதுக்கியுள்ளது.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூலை 6 ந் மீ உ.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது